இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இவ்வழிபாட்டுச் சடங்கின்போது, தலைமைத்துவத்தின் அடையாளமாக புதிய திருத்தந்தைக்கு பால்யம் மற்றும் மீனவர் மோதிரம் எனப்படும் முத்திரை மோதிரம் வழங்கப்பட்டது.

# பால்யம் மற்றும் மீனவர் மோதிரம் வழங்கும் சடங்கு



### இறைவார்த்தை வழிபாடு

திருப்பலியில் வானவர் கீதமானது பாடப்பட்டதைத் தொடர்ந்து இறைவார்த்தை வழிபாடானது ஆரம்பமானது.

இவ்வழிபாட்டுச் சடங்கின்போது, தலைமைத்துவத்தின் அடையாளமாக புதிய திருத்தந்தைக்கு பால்யம் மற்றும் மீனவர் மோதிரம் எனப்படும் முத்திரை மோதிரம் வழங்கப்பட்டது. என் ஆடுகளைப் பேணி வளர் என்று இயேசுவால் கட்டளையிடப்பட்ட திருத்னதர் பேதுருவின் வாரிசாக அவர் இருக்க வேண்டும் என்ற கடமையை இப்பால்யமும் மோதிரமும் நினைவூட்டுகின்றன. திருஅவையின் தலைவராக, தியாகமுள்ள வாழ்வு வாழ்ந்த திருத்னதர் னய பேதுரு மற்றும் கிறிஸ்துவிற்காகவும் கிறிஸ்தவத்திற்காகவும் தங்களது இன்னுயிரை தியாகம் செய்த மக்கள் ஆகியோர் இரத்தம் சிந்திய இடத்தில் புதிய திருத்தந்தை பணியேற்கும் வழிபாட்டுச் சடங்கானது நடைபெற்றது.

### பால்யம்

பால்யம் என்பது ஆட்டுக்குட்டியின் கம்பளியால் செய்யப்பட்டது. இது நால்லாயனை அடையாளப்படுத்துகின்றது இப்பால்யமானது, தொலைந்து போன ஆடுகளைத் தேடிக் கண்டடைந்து தனது தோள்களில் சுமந்து செல்லும் நல்லாயனைப்போல திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை இருப்பார் என்பதை அடையாளப்படுத்தும் வண்ணம் புதிய திருத்தந்தைக்கு வழங்கப்பட்டது

### மீனவர் மோதிரம்

நம்பிக்கையை அடையாளப்படுத்தும் விதமாக புதிய திருத்தந்தைக்கு வழங்கப்பட்ட இந்த மீனவர் மோதிரமானது, மீனவரான பேதுரு இயேசுவின் அழைப்பை ஏற்று வலைகளை வீசி அதிகப்படியான மீன்களைப் பெற்றார் என்பதை அடையாளப்படுத்தும் விதமாகவும், தனது சகோதரர்களும் சீடர்களுமான பிறரை நம்பிக்கையில் உறுதிப்படுத்து என்று பேதுருவிடம் ஒப்படைக்கப்பட்ட பணியின் அடையாளமாகவும் வழங்கப்பட்டது.

### கீழ்ப்படிதல் சடங்கு

இறுதியாக கர்தினால் திருத்தொண்டர் திருத்தந்தையிடம் நற்செய்தி புத்தகத்தை வழங்க திருத்தந்தை 14-ஆம் லியோ அவர்கள், புதிய திருத்தந்தை நற்செய்தி புத்தகம் கொண்டு மக்கள் கூட்டத்திற்கு ஆசீர் வழங்க கிரேக்க மொழியில் "Ad multos annos!" பாடலானது பாடப்பட்டது. மக்கள் கரவொலி எழுப்பி தங்களது மகிழ்வினை தெரிவித்தனர்.

மெரினா ராஜ் - வத்திக்கான்



# திருத்தந்தை: மனிதாபிமான உதவிகளை காசாவுக்குள் அனுமதியுங்கள்

மோதல் இடம்பெறும் காசா பகுதியில் நிவாரணப் பொருட்கள் தடைச் செய்யப்படுவதால் பெருமளவில் துயர்களை குழந்தைகளும், முதியோரும் நோயாளிகளும் அனுபவிக்கின்றனர் என கவலையை வெளியிட்ட திருத்தந்தை 14ஆம் லியோ அவர்கள், மோதல்கள் நிறுத்தப்பட வேண்டும் மற்றும் மனிதாபிமான உதவிகள் காசாவுக்குள் அனுமதிக்கப்பட வேண்டும் என அழைப்பு விடுத்தார்.

தன் புதன் மறைக்கல்வி உரையின் இறுதியில் காசா மக்களுக்கான இவ்வழைப்பை விடுத்த திருத்தந்தை, காசா பகுதி மக்களின் நிலை மிகுந்த கவலையையும் வேதனையையும் தருவதாக உள்ளது என்றார்.

பன்னாட்டு உதவி நிறுவனங்களின் கூற்றுப்படி, காசாவில் மனிதாபிமான நெருக்கடி மிகத் தீவிர நிலையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

காசா பகுதியில் பசிச்சாவுகள் ஏற்படும் ஆபத்து இருப்பதை ஐ.நா. நிறுவனமும் குறிப்பிட்டு எச்சரிக்கையை விடுத்துள்ளது.

கடந்த 2023ஆம் ஆண்டு அக்டோபரில் இருந்து ஆயுத மோதல்களால் பல ஆயிரக்கணக்கானோர் இறந்துள்ள நிலையில் மே 20, செவ்வாயன்று இடம்பெற்ற இஸ்ராயேல் விமானத் தாக்குதலில் குழந்தைகள் உட்பட எண்ணற்ற பாலஸ்தீனர்கள் இறந்துள்ளனர்.

குறிப்பிட்ட எண்ணிக்கையில் மட்டுமே நிவாரணப் பொருட்களை ஏற்றிச் செல்லும் வண்டிகள் காசாவுக்குள் நுழைய இஸ்ராயேல் அனுமதித்துள்ளதை குறைகூறும் பன்னாட்டு அமைப்புக்கள், பாலஸ்தீனர்களுக்கு எதிரான தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும் மற்றும், உதவிகள் மீதான கட்டுப்பாடுகள் நீக்கப்படவேண்டும் என மீண்டும் அழைப்பு விடுத்துள்ளன.

இஸ்ராயேல் குண்டுவீச்சு தாக்குதல்களால் மக்களின் உறைவிடங்கள் பெருமளவில் சேதமாக்கப்பட்டு வருவது குறித்து ஐ.நா. நிறுவனமும் தன் ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளது.

கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - வத்திக்கான்

# தகவல் தொடர்பை வன்முறையற்றதாக மாற்ற வேண்டிய அவசியம்

**“உங்கள் உள்ளத்தில் நீங்கள் எதிர்நோக்கி இருப்பதைக் குறித்து பணிவோடும் மரியாதையோடும் பகிருங்கள்” என்பது ஜூபிலி ஆண்டு 2025 சமூகத் தொடர்பு நாள் கருப்பொருள்.**

2025ஆம் ஆண்டில் ஜூன் மாதம் முதல் தேதி, ஞாயிறன்று திருஅவையில் சிறப்பிக்கப்படும் 59வது உலக தகவல் தொடர்பு நாளுக்கான கருப்பொருளாக, “உங்கள் உள்ளத்தில் நீங்கள் எதிர்நோக்கி இருப்பதைக் குறித்து பணிவோடும் மரியாதையோடும் பகிருங்கள்” (1பேதுரு 3:15-16) என்பது அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் பெந்தகோஸ்தே ஞாயிறுக்கு முந்தைய ஞாயிறன்று சிறப்பிக்கப்படும் உலக சமூகத்தொடர்பு நாளுக்கென மரித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எடுத்த கருப்பொருள், இன்றைய உலகில் தகவல் தொடர்பு என்பது வன்முறையாக மாறி, உரையாடலுக்கான நிபந்தனைகளையல்ல, மாறாக, தாக்குதலை நோக்கமாகக் கொண்டுள்ளதால் தகவல் தொடர்பை வன்முறையற்றதாக மாற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது.

இன்றைய தொலைக்காட்சி உரையாடல் நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது போட்டிகளும், எதிர்ப்புகளும், அடக்கியாளும் மனப்பான்மைகளும் மேலோங்கி, வார்த்தைப் போர்களாகவே இருப்பதைக் உணர்கிறோம் என தகவல் தொடர்பு நாள் கருத்துப் பற்றி எடுத்துரைக்கும் திருப்பீட அறிக்கை, கிறிஸ்தவ எதிர்நோக்கு என்பது சமூகத்தோடு பின்னிப் பிணைந்தது என்பதால் அந்த சமூகத்திற்கு ஒவ்வொரு கிறிஸ்தவரும் தங்கள் சொல்லாலும் செயலாலும் கிறிஸ்துவின் நம்பிக்கையை வழங்குபவர்களாக இருக்க வேண்டும் என அழைப்பு விடுக்கிறது.

ஒவ்வோர் ஆண்டும் திருஅவையில் சிறப்பிக்கப்படும் உலக தகவல் தொடர்பு நாள், இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்திற்குப் பின் 1967ஆம் ஆண்டு திருத்தந்தை புனித ஆறாம் பவுல் அவர்களால் உருவாக்கப்பட்டது.

கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - வத்திக்கான்






# நல்லாயன் பங்கு மாணவர்களின் புதிய பயணம்......

கடந்த 3.5.25ல் ஸ்தாபாக், நல்லாயன் பங்கின் தமிழ் அப்போஸ்தலர் மற்றும் மறைபோதக குழு தலைமையில் குழுவின் ஏற்பாட்டில் எதிர்நோக்கின் திருப்பயணிகள் கருத்தில் புனித பயணத்தை மேற்கொண்டனர். இறையருளின் நிகழ்வான ஜூபிலி ஆண்டில் கடவுள் நம்பிக்கையின் ஆற்றலை அதிகரிக்கவும், ஆன்மீக வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும் வண்ணம் இந்த முதல் பயணம் அமைந்தது.

போர்டிக்சன், அமலோர்ப மாதா தேவாலயத்தை அடைந்ததும், பங்கின் பணியாளர்கள் அன்போடு அனைவரையும் வரவேற்றனர். பங்கின் வரலாறு மற்றும் ஜூபிலி ஆண்டின் கருத்தைப் பகிர்ந்து கொண்டவுடன் மறைக்கல்வி மாணவர்களுக்கான நிகழ்ச்சி தமிழில் வழிநடத்தப்பட்டது. ஜெபமாலை வழி கருத்துகளுக்காக ஜெபித்தார்கள். அன்றைய காலை நிகழ்ச்சி திருப்பலியோடு நிறைவுற்றது.

நம்பிக்கையின் விதைகளை விதைக்கக்கூடிய நற்செய்தியின் துணிவுள்ள பிள்ளைகளான வாழ்பவர்களாக இருக்கவேண்டும் என்ற சிந்தனையோடு எங்கள் பயணம் அடுத்த தேவாலயமான புனித அசிசியார் செராலை நோக்கி தொடர்ந்தது. மிக மகிழ்ச்சியுடன் எங்களை வரவேற்று அவர்களின் நிகழ்ச்சியை தொடங்கினார்கள். பங்கின் வரலாறு மற்றும் கண்ணாடி கதவின் விளக்கம் கொடுக்கப்பட்டது. நல்லாயன் பங்கின் மாணவர்கள் கடவுளின் மேன்மையை மேலும் அதிகபடியாக அறிந்துக்கொள்ள முடிந்தது. நம்பிக்கை என்பது எப்போதும் நமது செயலில் பிரதிபலிக்க வேண்டும் என்று அங்கு கொடுக்கப்பட்ட புனிதர்களின் வாழ்க்கை வரலாற்றில் தெளிவாக தெரிந்து கொண்டார்கள்.

வீடு திரும்பும்போது, இந்த புனித பயணம் நம்பிக்கையின் புதிய செயல்முறைகளை நமது அர்ப்பணிப்பின் வழியாக வளர்ச்சியடைய வேண்டும் என்று மாணவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

தமிழ் அப்போஸ்தலர் குழு (நல்லாயன் பங்கு, ஸ்தாபாக்)



# ஆங்கில மறைக்கல்வி மாணவர்களின் ஈஸ்டர் கொண்டாட்டம்

கடந்த 26.4.25 யில் கூலீம் திரு இருதய ஆண்டவர் பங்கில் ஆங்கில மறைக்கல்வியில் ஈஸ்டர் (கிறிஸ்து உயிர்த்தெழுதல்) கொண்டாட்டத்தையொட்டி ஒன்றுக் கூடுதல் நடைப்பெற்றது. இவ்வாண்டின் முதல் நிகழ்ச்சியாகவும் அமைந்தது. மதியம் 2.30 மணி அளவில் தொடக்க செபத்துடன் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சியில் ஆரம்ப பள்ளி மாணவர்கள் 22 பேரும், இடைநிலை பள்ளி மாணவர்கள் 24 பேரும் கலந்துக் கொண்டனர். 4 மாத அளவில் எங்கள் பங்கில் பணிபுரிந்த அருட் சகோதரர் பேட்டரிக் அவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்துக்கொண்டு மாணவர்களை மகிழ்வித்தார்.

Action songs, சிறுவர்களுக்கான ஈஸ்டர் முட்டைகள் அலங்கரிக்கும் போட்டி, மறுசுழற்சி பொருட்களைக் கொண்டு விவிலிய கதாபாத்திரத் தில் உள்ளவர்களை அழகுப் படுத்தல் ஆகிய அம்சங்கள் நிறைந்திருந்தன. மறைக்கல்வி ஆசிரியர்களும் பங்கேற்று ஒத்துழைப்பு நல்கினர். பணியின் நிமித்தம் பெற்றோர்களின் பங்களிப்பு மிகவும் குறைந்துக் காணப்பட்டது. உணவு பலகாரங்கள், பரிசு பொருட்கள் ஆகியவைகளை வழங்கிய மறைக்கல்வி ஒருங்கிணைப்பாளர்கள், ஆசிரியர்கள்,பெற்றோர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். ஆங்கில ஒருங்கிணைப்பாளர் ஜோவேல் நிகழ்ச்சியை முதல் முறையாகவும் சிறப்பாகவும் வழிநடத்தினார். மாலை மணி 4.30க்கு அருட்சகோதரர் பேட்ரிக் அவர்களின் இறுதி செபத்துடன் நிகழ்ச்சி இனிதே முடிவடைந்தது. எல்லா வழிகளிலும் ஒத்துழைப்பு



வழங்கிய தலைமை குருவும் பங்கு குருவுமான மறைத்தந்தை ஹென்றி ராஜூ, அருட் சகோதரர் பேட்டரிக் ஆகிய இருவருக்கும் எங்களின் இதயம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

# அன்னை மரியாள் – நம்முடைய உண்மையான நம்பிக்கையின் தாய்





கோலாலம்பூர்: மே 13, பிரிக்ஃபீல்ட்சில் அமைந்துள்ள புனித பாத்திமா அன்னை தேவாலயத்தின் பங்குத் திருவிழா மிகச் சிறப்பாக நடந்து முடிந்தது. அன்றைய தினம் விசுவாசிகள் தேவாலயத்தில் நிரம்பி காணப்பட்டனர். நமது பாத்திமா அன்னையின் சுரூபம் பல வண்ண மலர்களால் அலங்கரிப்பட்டிருந்தது. சாம்பிராணியின் வாசனையும் பாடப்பட்ட பாடல்களும் வந்திருந்த அனைவரையும் அமைதி நிலைக்கு இட்டுச் சென்றது என்றால் அது மிகையாகாது. பங்குத் திருவிழா நற்கருணை ஆராதனையோடு ஆசீர்வாதத்துடன் இனிதே தொடங்கியது.

இத்திருவிழா திருப்பலியைப் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் முதன்மை குருவானவராக ஏற்று நடத்தினார். அருட்பணியாளர்கள் VA மைக்கேல், ஆண்ட்ரூ மாணிக்கம் ஆகியோர் இத்திருப்பலியில் இணைந்திருந்தனர்.

பேராயர் ஜூலியன் அவர்கள் தமது மறையுரையில், அன்னை மரியா எளிமையான சிறுவர்கள் முன் தோன்றி, இவ்வுலக அமைதிக்காகவும் அனைத்து மக்களுக்காகவும் ஜெபிக்கும்படிக் கேட்டுக்கொண்டதாகக் கூறினார். நம் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும் நம் இதயங்களிலும் நாம் சுமக்கும் அனைத்து வேதனைகளையும் துன்பங்களையும் இறைவன் அறிதுள்ளார் எனவும், நாம் அனைவரும் இவ்வுலக அமைதிக்காகவும் பாவிகள் மனந்திரும்பவும் செபிக்க அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை மறந்து விடக்கூடாது எனவும் தெரிவித்தார். மேலும் பேராயர் பேசுகையில் "அன்னை மரியா பல துன்பங்களைக் கடந்து வந்தவர். அவரிடம் இருந்த உண்மையான நம்பிக்கையை நாம் கண்டுணர வேண்டும்" என்று கூறினார்.

மேலும், நம்பிக்கையின் மக்களாக நம்முடைய பங்கைக் குறித்து அனைவருக்கும் நினைவூட்டிய பேராயர் ஜூலியன், "நற்கருணை கொண்டாட்டத்தில் பங்குப் பெற இறைவன் நம்மை அழைக்கிறார்" எனவும், நற்கருணையானது "அன்னை மரியாவைப் பின்பற்றுவதற்கும், இவ்வுலகிற்காக செபிப்பதற்கு நமக்கு வலிமையும் ஊக்கமும் கொடுக்கும்", எனவும் தெளிவுப்படுத்தினார்.

அருட்பணியாளர் VA மைக்கேல் அவர்கள் தமது மறையுரையில் மரியாள், பாத்திமா நகரில் சிறு பிள்ளைகளுக்குக் காட்சியளித்து செபமாலை செபிக்கும்படி நினைவுறுத்தியதாகக் கூறினார். தேவமாதா காட்சியளித்த மே மாதம் 13 ஆம் நாள் இன்று வரை பக்தி நிறைந்த நாளாக கத்தோலிக்கர்களால் அனுசரிக்கப்படுகின்றது. அன்று இயேசுவின் கல்வாரி பயண பாடுகளின் போது, அன்னை மரியா தமது மகனை விட்டு விலகாது, சொல்லொண்ணா வேதனைகளைத் தன் இதயத்தில் சுமந்து; அமைதியாக இயேசுவைப் பின் தொடர்ந்தார். "அமைதி" என்ற சொல் அன்னை மரியாவின் திருப்பெயரென இன்றுவரை போற்றப்படுகின்றது.

திருஅவையின் தாயாகிய மரியா எல்லாக் காலங்களிலும் தம்மைத் தாழ்த்தி, இயேசுவையே உயர்த்தியுள்ளார். இஃது இறை மக்களாகிய நாம் மரியாவிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய படிப்பினைகளில் ஒன்று என்று அருட்தந்தை தமது மறையுரையில் குறிப்பிட்டார். அதோடு தற்பொழுது பல குடும்பங்களில் பிரச்சனைகளும், பிரிவினைகளும் அதிகரித்து விட்டதற்குக் குடும்ப உறுப்பினர்கள் ஒன்றிணைந்து குடும்ப செபம் செய்வதும், செபமாலை செபிப்பதும் மிகவும் குறைந்து விட்டதானது இதற்கான காரணங்களாக அமைகின்றன என்றார். கானாவூர் திருமணத்தில் 'அவர் சொல்வதைச் செய்யுங்கள்' என்று கூறிய தேவ தாயின் வாக்கினால் அத்திருமணம் நிறைவு பெற்றது. அதேபோல் அந்தத் தாய் நம்மையும் தொடர்ந்து செபமாலை செபிக்க தியானிக்க அழைக்கிறார். அந்தத் தாயின் சொல்லைக் கேட்டு நாமும் உலக அமைதிக்காகவும், நமது குடும்பங்களில் அமைதியும், அன்பும், கீழ்படிதலும் நிலைபெறத் தொடர்ந்து செபமாலை சொல்வோம், என்று தமது மறையுரையில் தெளிவாகவும், விளக்கமாகவும் குருவானவர் எடுத்துரைத்தார். புனித பாத்திமா அன்னை திருவிழாவுக்கு வந்திருந்த திரளான இறை மக்களுக்கு ஆசி கூறி தமது மறையுரையை நிறைவுச் செய்தார், நமது அருட்பணியாளர் VA மைக்கேல்.

பிறகு பிரிக்ஃபீல்ட்ஸ் சாலைகளைச் சுற்றி புனித பாத்திமா அன்னை சுரூப ஊர்வலம் நடைபெற்றது. ஒரு கையில் எரியும் மெழுகுவர்த்தியும் மறு கையில் ஜெபமாலையுடனும் விசுவாசிகள் இதயத்தில் நம்பிக்கையுடன் செபமாலை செபித்து ஊர்வலமாக நடந்து சென்றனர். இதனைக் காண பல இன மதங்களைச் சேர்ந்த மக்கள் அமைதியாகத் தெருவோரங்களில் திரண்டதைப் பார்க்க முடிந்தது. அங்கே இருந்த கடைகளில் ஒலித்த பாடல் இசைகள் நிறுத்தப்பட்டன. இதன் வழி பிற மதத்தவர்கள் ஊர்வலத்திற்கு மரியாதைக் கொடுப்பதைப் பார்க்க மகிழ்ச்சியாக இருந்தது. அருட்பணியாளர் ஆண்ட்ரூ அவர்கள், "அனைவரும் ஒன்றிணைவது இயேசுவின் திரு உடலான திரு அவையைக் குறிக்கின்றது. அதற்கு இதுவே சிறந்த சாட்சியாகும்" என்று கூறினார்.

# பாஸ்கா காலம் 7 ஆம் ஞாயிறு (1.6.2025)

**திருத்தூதர் பணிகள்: 7:55-60**
**திருவெளிப்பாடு: 22:12-14, 16-17, 20**
**யோவான்: 17:20-26**

### "ஆண்டவராகிய இயேசுவே வாரும்"

நாம் வெகுவிரைவில் பாஸ்கா காலத்தை நிறைவுசெய்யவுள்ளோம். கடந்த வியாழன் அன்று ஆண்டவரின் விண்ணேற்றப் பெருவிழாவை நாம் கொண்டாடினோம். இன்றைய வாசகங்கள் முதலில் தொடக்ககால நம்பிக்கையாளர்களின் வாழ்வைப் பற்றியும் குறிப்பாக புனித ஸ்தேவானின் சாட்சியமும், இரண்டாம் வாசகத்தில் நற்செய்தியாளர் யோவானின் காட்சியும் நிறைவாக ஆண்டவர் இயேசுவின் இறைவேண்டலையும் நாம் காண்கிறோம்.

ஒவ்வொரு ஞாயிறும் ஒரு உயிர்ப்பின் ஞாயிறாக நாம் கொண்டாடுகிறோம். அந்த உயிர்ப்பின் நீட்சியாகத் தான் தொடக்க கால திருஅவையில் நம்பிக்கையாளர்கள் நாள்தோறும் சேர்ந்துகொண்டே இருந்தார்கள். ஆனால் இதை விரும்பாத யூத தலைமைக்குருக்கள் ஸ்தேவான் மீது கல்லெறிந்து கொன்றார்கள். தாம் உயிர் துறப்பதற்குமுன் மீட்பின் வரலாற்று முழுவதையும் அவர் கூறி, சாட்சியமளித்து உயிர் நீத்தார். இவரே நம் திருஅவையில் முதல் மறைசாட்சி. உயிரே போனாலும் ஸ்தேவான் அவருடைய நம்பிக்கையில் உறுதியாய் நிலைத்து நின்றார்.

இன்றைய திருவெளிப்பாட்டு நூலில் இயேசு, முதலும் இறுதியும், அகரமும் னகரமும், தொடக்கமும் முடிவும் நானே என்று கூறுகிறார். அனைத்துக்கும் அவர்தான் காரணம் என்றும் உலகின் இறுதிநாளில் நானே வருவேன் என்றும் கூறுகிறார்.

நற்செய்தியில் இயேசுவின் புகழ்பெற்ற இறைவேண்டலை நாம் காண்கின்றோம். இறைமகனாக இருந்தும் இறைவேண்டலின் முக்கியத்துவத்தை நமக்கெல்லாம் இயேசு காட்டிச்சென்றார். அவரின் இறைவேண்டல் ஒற்றுமையின் இறைவேண்டல். "தந்தாய், எல்லாரும் ஒன்றாய் இருப்பர்களாக"என்று கூறியவர், நம்மீது அளவற்ற அன்பு கொண்டிருந்ததபடியினால் நம்மில் ஒருவர்கூட அவரைவிட்டுப் பிரிந்துபோகக்கூடாது என்று இயேசு விரும்புகிறார். இன்றைய வாசகங்களின் சுருக்கமான செய்தியை நாம் இவ்வாறு காணலாம்

* இயேசு தாம் மீண்டும் வருவேன் என்று வாக்குறுதியளிக்கிறார்.
* ஒற்றுமைக்கான இறைவேண்டலை செய்கிறார்.
* அவரே அனைத்திற்கும் காரணமும் முதலும் முடிவுமாக இருக்கிறார்.

இன்று நாம் காணும் புனித ஸ்தேவானின் சாட்சியமிக்க வாழ்வு நமக்கெல்லாம் ஒரு முன்மாதிரியான கிறிஸ்துவ வாழ்வைக் காட்டுகிறது. இன்று நம்மிடையே கிறிஸ்துவம் சிறு சிறு சபைகளாக உடைந்துகொண்டிருப்பதைக் காணும்போது, இயேசு விரும்பிய ஒற்றுமையை நாம் காணமுடியவில்லை. முதலில் நம்முடைய குடும்பம் என்னும் சிறிய குடும்பத்திலே அன்பைக் காட்டி ஒற்றுமையைக் கட்டிக்காப்போம். இயேசு தந்த மீட்பு நம்மில் ஒவ்வொருநாளும் பெருகிடவும், அன்பை மட்டுமே மையமாகக் கொண்டு "நான் உங்களை அன்பு செய்ததுபோல" என்று இயேசு காட்டிய அன்பை நாம் காணும் ஒவ்வொருவரிடமும் காட்டிட முன்வருவோம். அவ்வாறு செய்வதால் நம்மிடையே இயேசு குடிகொள்வார். நம்மை அவருடைய அருளால் ஆளுவார். வழிநடத்துவார்.

வரவிருக்கும் பெந்தகோஸ்தே விழாவை தகுந்த தயாரிப்போடு வரவேற்று நய ஆவியார் நம்முள் எப்போதும் செயலாற்றிட அவரை நம்முள்ளே அனுமதிப்போம். வாரும் இயேசுவே வாரும்.